RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in
DAILY EVENING
மாலை நாளிதழ்
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 256 | செப்டம்பர் 20, 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# சுவிட்சர்லாந்து செல்கிறார் முதலமைச்சர் விஜய்? உலக பொருளாதார மன்றக் கூட்டத்தில் பங்கேற்பதாக தகவல்

சென்னை: செப்.20-

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக பொருளாதார மன்ற ஆண்டுக் கூட்டத்தில் முதலமைச்சர் விஜய் பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ்-க்ளோஸ்டர்ஸ் நகரில் அடுத்த ஆண்டு ஜனவரி 18 முதல் 22-ஆம் தேதி வரை உலக பொருளாதார மன்றத்தின் ஆண்டுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் முதலமைச்சர் ஜோசப் விஜய் பங்கேற்க உள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உலக அளவில் தொழில் மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்படும் இந்த மாநாட்டில், முதலீடுகளை ஈர்ப்பது மற்றும் தொழில் கொள்கை தொடர்பான விவாதங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் முதலமைச்சர் விஜய் பங்கேற்க உள்ளதாக கூறப்படுகிறது.

டாவோஸ் உலக பொருளாதார மன்ற கூட்டம்



உலக பொருளாதார மன்றத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி அலோய்ஸ் ஸ்விங்கி விடுத்துள்ள அழைப்பை ஏற்று, முதலமைச்சர் விஜய் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள உள்ளதாக கூறப்படுகிறது. உலக பொருளாதார மன்றக் கூட்டத்தில் 100-க்கும் மேற்பட்ட நாடுகளின் அரசு பிரதிநிதிகள், 1,000 முன்னணி உலகளாவிய நிறுவனங்களின் பிரதிநிதிகள், சர்வதேச அமைப்புகள், சமூக அமைப்புகள் பங்கேற்க உள்ளன.

டாவோஸ் மாநாட்டில் வாகன உற்பத்தி, மின்னணுவியல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உலகளாவிய திறன் மையங்கள், சுகாதாரம், உயிரி அறிவியல் மற்றும் மேம்பட்ட உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பான வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

இதில், தமிழ்நாட்டின் உற்பத்தித் துறையின் வலிமை, மின்னணுவியல் மற்றும் வாகன உற்பத்தித் துறைகளில் உள்ள வாய்ப்புகள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறைக்கான சாத்தியக்கூறுகள் ஆகியவை தொடர்பாக முதலமைச்சர் தரப்பில் எடுத்துரைக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பத் துறையின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் திறமையான பணியாளர்களை உருவாக்குவதற்கான தமிழ்நாட்டின் திட்டங்கள் குறித்தும் மாநாட்டில் எடுத்துரைக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

மாநிலங்களுக்கு இடையே தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான போட்டி அதிகரித்து வரும் சூழலில், வளர்ந்து வரும் புதிய தொழில் துறைகளுக்கான முக்கிய மையமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்தும் நோக்கத்துடன் டாவோஸ் மாநாட்டை பயன்படுத்திக் கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுவிட்சர்லாந்து செல்லும் முதலமைச்சர் விஜய்

இதனிடையே, முதலமைச்சர் விஜய்யின் சமீபத்திய லண்டன் பயணத்தின்போதும் தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்நாட்டில் உற்பத்தி ஆலைகள், உலகளாவிய திறன் மையங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வசதிகளை நிறுவுதல் மற்றும் விரிவுபடுத்துதல் உள்ளிட்டவற்றுக்காக பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாக தமிழ்நாடு அரசு தெரிவித்திருந்தது.

இதன் மூலம் ரூ.15,300 கோடிக்கும் அதிகமான முதலீட்டு முன்மொழிவுகள் மற்றும் உறுதிமொழிகள் பெறப்பட்டுள்ளதாகவும், அவற்றின் வாயிலாக தமிழ்நாட்டில் 10,000-க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தமிழ்நாடு அரசு செய்திக்குறிப்பில் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், லண்டன் பயணத்தைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு ஜனவரியில் சுவிட்சர்லாந்துக்கு முதலமைச்சர் விஜய் செல்ல உள்ளதாக வெளியாகியுள்ள தகவல் கவனம் பெற்றுள்ளது. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 2036-ஆம் ஆண்டுக்குள் 1.5 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்தும் இலக்கை தமிழ்நாடு அரசு நிர்ணயித்துள்ளது.

இந்த இலக்கை அடையும் வகையில் தொழில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்ப்பது, புதிய தொழில் துறைகளை மாநிலத்தில் உருவாக்குவது, வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது மற்றும் உலகளாவிய நிறுவனங்களுக்கான முக்கிய முதலீட்டு மையமாக தமிழ்நாட்டை உருவாக்குவது உள்ளிட்ட நடவடிக்கைகளில் தமிழ்நாடு அரசு கவனம் செலுத்தி வருகிறது.

இந்தச் சூழலில், உலக பொருளாதார மன்றத்தின் ஆண்டு கூட்டத்தில் முதலமைச்சர் விஜய் பங்கேற்பது, தமிழ்நாட்டின் தொழில் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை சர்வதேச அளவில் எடுத்துச் செல்வதற்கான மற்றொரு வாய்ப்பாக அமையும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கடற்கரையை சுத்தம் செய்வது ஒருநாள் நிகழ்வல்ல; தினசரி பழக்கமாக மாற வேண்டும் - ஆளுநர் அர்லேக்கர்

சென்னை: செப்.20-

கடற்கரையை தூய்மையாக வைத்திருப்பது அரசின் பொறுப்பு மட்டுமல்ல; ஒவ்வொருவரின் பொறுப்பும் என ஆளுநர் அர்லேக்கர் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை மெரினா கடற்கரையில் 'Swachh Sagar, Surakshit Sagar 5.0' எனப்படும் கடற்கரை தூய்மை மற்றும் கடல் பாதுகாப்பு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, சர்வதேச கடற்கரை தூய்மை தினத்தையொட்டி சிறப்பு தூய்மைப் பணி நடைபெற்றது.

நாடு முழுவதும் செப்டம்பர் 12 முதல் 19-ஆம் தேதி வரை நடைபெறும் 'Swachh Sagar, Surakshit Sagar 5.0' பிரச்சாரத்தின் நிறைவு நாளான இன்று, கடற்கரை தூய்மை, கடல் மாசுபாட்டை குறைத்தல் மற்றும் கடல் சுற்றுச்சூழலை பாதுகாப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. சென்னை மெரினாவில் நடைபெற்ற தூய்மைப் பணியில் ரோட்டரி கிளப் தன்னார்வலர்கள், பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் உள்ளிட்டோர் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

கடற்கரை கழிவுகளால் வருத்தம்

அவர்கள் குழுக்களாக இணைந்து மெரினா கடற்கரையில்




தேங்கியிருந்த பிளாஸ்டிக் கழிவுகள் உள்ளிட்ட குப்பைகளை சேகரித்து, கடற்கரையை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். கடற்கரையில் சேகரிக்கப்படும் கழிவுகளை முறையாக அகற்றுவதுடன், அவற்றை வகைப்படுத்தி கையாள்வதற்கும் இந்தப் பிரச்சாரத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்திய கடலோரக் காவல்படையினரும் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

இதனைத் தொடர்ந்து, நிகழ்ச்சியில் பங்கேற்ற தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய ஆளுநர், உலகப் புகழ்பெற்ற மெரினா கடற்கரையை சுத்தம் செய்வதற்காக நாம் தனியாக ஒரு நாளை கடைபிடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பது வருத்தமளிப்பதாக தெரிவித்தார்.

கடற்கரை மட்டுமின்றி நமது சுற்றுப்புறம், வீடு மற்றும் நம்மைச் சுற்றியுள்ள அனைத்து இடங்களையும் தூய்மையாக வைத்திருப்பது நமது அன்றாட பழக்கமாக மாற வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

கடற்கரை தூய்மை தினத்தன்று இங்கு கூடியுள்ள இளைஞர்களும், மாணவர்களும், கடற்கரையை சுத்தம் செய்வதன் மூலம் தங்களுக்கு ஒரு முக்கியமான செய்தியை வழங்கியுள்ளதாக ஆளுநர் குறிப்பிட்டார். கடற்கரை தூய்மைப் பணியில் பங்கேற்ற கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்த அவர், இளைஞர்கள் காட்டியுள்ள இந்த வழியை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நம் பொறுப்பு

மேலும், கடற்கரையை தூய்மையாக வைத்திருப்பது அரசின் பொறுப்பு மட்டுமல்ல; ஒவ்வொரு தனிநபரின் பொறுப்பும் ஆகும் என ஆளுநர் தெரிவித்தார். இதற்காக அரசு அதிகாரிகளோ, ராஜ்பவனில் இருந்து யாரேனும் வந்து அறிவுறுத்த வேண்டிய அவசியம் இல்லை என்றும், 'கடற்கரையை தூய்மையாக வைத்திருப்பது என்னுடைய பொறுப்பு' என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இளைஞர்கள் நமக்கு வழிகாட்டியுள்ளதாக தெரிவித்த ஆளுநர், கடற்கரை தூய்மையை ஒரு நாள் நிகழ்வாக மட்டும் பார்க்காமல், அதை தினசரி பழக்கமாக மாற்ற வேண்டும் என வலியுறுத்தினார். இறுதியாக, இளைஞர்களுடன் இணைந்து கடற்கரையை தினமும் தூய்மையாக வைத்திருப்போம் என அனைவரும் உறுதியேற்க வேண்டும் என்றும் தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் தெரிவித்தார்.

மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் - NIOT மற்றும் ரோட்டரி கிளப் சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

# மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தல் வெளியானது இறுதி வேட்பாளர் பட்டியல்

சென்னை: செப்.20-

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரு சட்டப் பேரவை தொகுதிகளில் நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியானது.

மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரு சட்டப் பேரவை தொகுதிகளிலும் அக்டோபர் மாதம் 6 ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் முடிந்து, பரிசீலனை நிறைவடைந்துள்ள நிலையில், இறுதி வேட்பாளர் பட்டியல் இன்று வெளியானது.

அதன்படி, மதுராந்தகம்




சட்டப் பேரவை தொகுதியில் தவெக சார்பில் முன்னாள் எம்எல்ஏ மரகதம் குமரவேல், திமுக சார்பில் முன்னாள் எம்எல்ஏ பரந்தாமன், அதிமுக சார்பில் முன்னாள் எம்எல்ஏ கணிதா சம்பத், நாம் தமிழர் கட்சி சார்பில் ஜானகி ராமன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சுகந்தி ஆகியோர் களத்தில் உள்ளனர். இவர்களுடன் சுயேட்சை வேட்பாளர்கள் 22 பேர் என மொத்தம் 27 பேர் போட்டியிடுகின்றனர்.

தாராபுரத்தில் 22 பேர் போட்டி

தாராபுரம் சட்டப் பேரவை தொகுதியில் தவெக சார்பில் முன்னாள் எம்எல்ஏ சத்தியபாமா, திமுக சார்பில் எஸ். சுகன்யா, அதிமுக சார்பில் கே.பானுமதி, நாம் தமிழர் கட்சி சார்பில் கார்த்திகா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் லட்சுமணன் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இந்த வேட்பாளர்களுடன் சுயேட்சை வேட்பாளர்கள் 17 பேரையும் சேர்த்து மொத்தம் 22 பேர் களத்தில் உள்ளனர்.

# மதுரையில் காவல் நிலையம் அருகே படுகொலை - போலீசார் தீவிர விசாரணை

மதுரை: செப்.20-

மதுரையில் நேற்று அதிகாலையில் 50 வயது நபர் ஓட ஓட விரட்டப்பட்டு, காவல் நிலையம் அருகே படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. இச்சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மதுரை மாநகர் சோலை அழகுபுரம் சப்பாணி கோவில் தெருவைச் சேர்ந்தவர் சப்பாணி சரவணன் (50). இவர் மீது பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாகவும், சில வழக்குகளில் சிறை சென்று தற்போது வீட்டில் இருந்ததாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில், சோலை அழகுபுரம் பிரதான சாலையிலுள்ள டீக்கடைக்கு சரவணன் தினமும் வந்து செல்வதை மர்ம நபர்கள் சிலர் நோட்டமிட்டு வந்துள்ளனர்.

நேற்று அதிகாலை சரவணன் டீக்கடைக்கு வந்த போது, ஆயுதங்களுடன் வந்த சுமார் 5 பேர்



கொண்ட கும்பல் அவரை திடீரென சுற்றி வளைத்து தாக்கியுள்ளது. அந்த கும்பலிடம் வாள், கத்தி, அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்கள் இருந்துள்ளன.

கும்பலின் தாக்குதலில் இருந்து தப்பிப்பதற்காக சரவணன் சாலையில் ஓடியுள்ளார். ஆனால், அவரை விடாமல் பின்தொடர்ந்த அந்த மர்ம கும்பல் ஓட ஓட விரட்டிச் சென்று சரவணனை சரமாரியாக வெட்டியும் குத்தியும் தாக்கியுள்ளது. இதில் படுகாயமடைந்த சரவணன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற ஜெய்ஹிந்த்புரம் போலீசார், கொலை தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவ இடத்தில் கிடந்த ஆயுதங்கள் உள்ளிட்ட தடயங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் அந்த பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும் சிசிடிவி காட்சிகளையும் வைத்து போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர்.

கொலை நடந்த இடத்தை மதுரை மாநகர காவல் துணை ஆணையர் இனிகோ திவ்யன் நேரில் பார்வையிட்டு, காவல்துறை அதிகாரிகளிடம் சம்பவம் குறித்து கேட்டறிந்தார். சப்பாணி சரவணன் மீது ஏற்கனவே பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதால், முன்விரோதம் காரணமாக இந்தக் கொலை நடந்ததா? அல்லது வேறு ஏதேனும் காரணம் உள்ளதா? என்பது குறித்து போலீசார் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பொதுமக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பிரதான சாலையில் ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையம் அருகேயே இந்த கொலை நடந்திருப்பது அப்பகுதி மக்களை அச்சத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

# முதலமைச்சர் விஜய்க்கு 'வால்' பிடிக்கும் அஜித்குமார்: அதிமுக முன்னாள் அமைச்சர் சண்முகநாதன் விமர்சனம்

தூத்துக்குடி: செப்.20-

தன்னுடைய பலம் தெரியாமல் தன்னையே அழித்துக் கொண்டு முதலமைச்சர் விஜய்க்கு வால்பிடித்து கொண்டிருக்கிறார் அஜித்குமார் என்று அதிமுக முன்னாள் அமைச்சர் சண்முகநாதன் விமர்சித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி கிருஷ்ணன் கோவில் திடலில் அதிமுக சார்பில் அண்ணா பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் சண்முகநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது பேசிய முன்னாள் அமைச்சர் எஸ்.பி.சண்முகநாதன், "தவெக ஆட்சியைப் பிடிக்கவில்லை; மைனாரிட்டி அரசுதான். 108 இடங்களில் மட்டும் வெற்றி பெற்று, பிற கட்சிகளிடம் பிச்சை எடுத்துத் தான் அரசை நடத்திக் கொண்டிருக்கின்றனர். அமைச்சர் பதவிக் கொடுத்ததும், திமுக கூட்டணியில் இருந்த கட்சிகள் தவெகவில் இணைந்துவிட்டன.

அதிமுகவில் இருந்து 25 துரோகிகள் முதலில் தவெக அரசுக்கு ஆதரவு தெரிவித்தனர். அவர்களில் 20 பேர் அதிமுகவிற்கு திரும்ப வந்துவிட்டனர்.

முதலமைச்சர் விஜய், லண்டனுக்கு சென்று ரூ.15,000 கோடி தொழில் முதலீட்டை ஈர்த்து வந்ததாகக் கூறுகின்றனர். தமிழ்நாட்டில் ஏற்கனவே தொழில் நடத்திக் கொண்டிருப்பவர்களை லண்டனுக்கு வரவேற்று அங்கு வைத்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகிறார்.

இதற்கு பேசாமல் தலைமைச் செயலகத்தில் வைத்தே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டிருக்கலாமே. அரசுப் பணத்தை வீணடித்துள்ளனர். இதற்கு ரூ.50 கோடி வரை செலவாகி உள்ளதாகக் கூறுகின்றனர்.

நடிகர் அஜித்குமார் அழைக்காமலேயே முதலமைச்சர் விஜய், கார் பந்தயத்திற்கு சென்று கொடியசைத்து தொடங்கி வைத்துள்ளார். முதலமைச்சர் விஜய்யைவிட அதிக செல்வாக்கு உள்ளவர் நடிகர் அஜித்குமார். தன்னுடைய பலம் தெரியாமல் தன்னையே அழித்துக் கொண்டு முதலமைச்சர் விஜய்க்கு வால்பிடித்து கொண்டிருக்கிறார் அஜித்குமார்.

எம்ஜிஆர் முதலமைச்சரான பிறகு மதுரையை மீட்ட 'சுந்தரபாண்டியன்' என்ற திரைப்படம் வெளியானது. இருந்தபோதிலும், தனது அமைச்சர்களை திரைப்படத்திற்கு போகுமாறு அவர் சொல்லவில்லை. ஆனால் 'ஜனநாயகன்' திரைப்படம் ரிலீஸ் ஆனதும் சட்டமன்றத்திற்கே விடுமுறை விட்டுவிட்டனர்.

அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அந்தந்த மாவட்டங்களுக்கு சென்று திரைப்படம் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் அந்த திரைப்படம் இரண்டே நாள்தான் ஓடியிருக்கிறது. திரைத்துறையில் செல்வாக்கினை இழந்த நிலையில் தான், அரசியலுக்கு முதலமைச்சர் விஜய் வந்துள்ளார்.

விஜயபாஸ்கர் மீது குட்கா முதல் பல்வேறு வழக்குகள் உள்ளன. அவரை தமிழக வெற்றிக் கழகத்தில் சேர்த்துள்ளனர். அப்படியென்றால் யார் தூய சக்தி?, தற்போது எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக தூய சக்தியாக மாறி உள்ளது. இடைத்தேர்தலில் இரண்டு தொகுதிகளிலும் மக்கள் சிந்தித்து வாக்களித்தால் அதிமுக வெற்றி பெறும்" என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



## சிவகங்கை இரட்டைக் கொலை விவகாரம்: ஆட்சியர் அலுவலகம் முன்பு யாதவர் மகா சபையினர் போராட்டம்

சிவகங்கை, செப்.20-
சிவகங்கை அருகே பையூர் கொடிக்காடு கண்மாய் பகுதியில் பூப்பாண்டி (25), தெய்வேந்திரன் ஆகிய இரு இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, காவல்துறையின் நடவடிக்கை குறித்து கேள்வி எழுப்பி யாதவர் மகா சபை சார்பில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு போராட்டம் நடைபெற்றது. இரட்டைக் கொலை சம்பவம் செப்.16 அன்று நடந்ததும், வழக்கில் 5 பேர் கைது செய்யப்பட்டதும் செய்திகளில் பதிவாகியுள்ளது.

Frontmedia +1

போராட்டத்தில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் திரண்டு, சிவகங்கை மாவட்ட எஸ்.பி., ஏ.டி.எஸ்.பி. ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர். மாவட்ட ஆட்சியர் அலுவலக நுழைவுவாயில் முன்பு திரண்ட போராட்டக்காரர்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

## மாணவர்களிடம் வாக்குரிமை விழிப்புணர்வு: 646 பள்ளி, கல்லூரிகளில் 'ELC' குழுக்கள்! தேர்தல் கல்வியறிவுக் குழுக்களை வலுப்படுத்த வேண்டும் கலெக்டர் நிஷாந்த் கிருஷ்ணா அறிவுறுத்தல்

மதுரை, செப்.20-
பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே வாக்குரிமை மற்றும் ஜனநாயகம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மதுரை மாவட்டத்தில் உள்ள 646 கல்வி நிறுவனங்களில் தேர்தல் கல்வியறிவுக் குழுக்கள் (ELC) அமைக்க ப்பட்டுள்ளன. இக்குழுக்களின் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் என மாவட்ட கலெக்டர் நிஷாந்த் கிருஷ்ணா அறிவுறுத்தினார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, மதுரை மருத்துவக் கல்லூரி அரங்கில் தேர்தல் கல்வியறிவுக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்த மாவட்ட அளவிலான கலந்தாய்வுக் கூட்டம் கலெக்டர் நிஷாந்த் கிருஷ்ணா தலைமையில் நடைபெற்றது.



மதுரை மாவட்டத்தில் 9 முதல் 12-ம் வகுப்பு வரை உள்ள அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் என 542 பள்ளிகளிலும், கலை மற்றும் அறிவியல், பொறியியல், பாலிடெக்னிக், ஐ.டி.ஐ., மருத்துவக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் என 104 கல்லூரிகளிலும் ELC குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலும் ELC-க்கென ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்பட்டு, ECINET இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும், வகுப்பு வாரியாக மாணவர்கள் உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டு, அவர்களின் விவரங்களை ELC-NET தளத்தில் பதிவு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

தேர்தல் நடைமுறைகள் குறித்து மாணவர்களுக்கு பயிற்சி

புதிய வாக்காளர் பதிவு, ECINET தளத்தின் பயன்பாடு, வாக்குப்பதிவு இயந்திரங்களின் செயல்பாடு, வாக்கு எண்ணிக்கை நடைமுறைகள் உள்ளிட்டவை குறித்து மாணவர்களுக்கு ELC குழுக்கள் மூலம் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என கலெக்டர் வலியுறுத்தினார்.

மேலும், இத்திட்டத்தை சிறப்பாகவும் தொடர்ச்சியாகவும் செயல்படுத்தும் கல்வி நிறுவனங்கள் கண்டறியப்பட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கி ஊக்கப்படுத்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

"அனைத்து தலைமையாசிரியர்கள், கல்லூரி முதல்வர்கள் தனிக்கவனம் செலுத்தி ELC செயல்பாடுகளை சிறப்பாக செயல்படுத்த வேண்டும்" என கலெக்டர் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அமைப்பு, உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் முறை மற்றும் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பவர்பாயிண்ட் மூலம் விளக்கினார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) செல்வி, வருவாய் கோட்டாட்சியர்கள் கருணாகரன், சங்கீதா, சிவஜோதி, மாவட்ட வழங்கல் அலுவலர் ராஜகுரு, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் செல்வன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் தயாளன் உள்ளிட்ட அதிகாரிகள், பள்ளித் தலைமையாசிரியர்கள், கல்லூரி முதல்வ ர்கள், ஆசிரிய ஒருங்கி ணைப்பாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## தாம்பரம் மத்திய பகுதியில் தமுமுக மமக அமைப்பு தேர்தல் பொதுக்குழு கூட்டம்




தாம்பரம், செப்.20-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மத்திய பகுதி தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் மற்றும் மனிதநேய மக்கள் கட்சி சார்பில் அமைப்பு தேர்தல் பொதுக்குழு கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

இக்கூட்டம் செங்கல்பட்டு மாவட்ட தலைவர் எஸ்.கே. ஜாகிர் உசேன் தலைமையில் நடைபெற்றது. தலைமை கழக பேச்சாளர் சலீம் கான் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக மனிதநேய மக்கள் கட்சியின் மாநில துணைப் பொதுச் செயலாளரும், தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினருமான எம். யாகூப் மற்றும் தேர்தல் அதிகாரியும் தலைமை பிரதிநிதியுமான ஏ.கே. சுல்தான் அமீர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பொதுக்குழு கூட்டத்தின் முக்கிய நிகழ்வாக தாம்பரம் மத்திய பகுதி மற்றும் மேற்கு பகுதி நிர்வாகிகளுக்கான அமைப்பு தேர்தல் நடைபெற்றது. மேலும் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட 49-வது வார்டு மற்றும் 50-வது வார்டு பகுதிகளிலும் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளுக்கான நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

அமைப்பு தேர்தலில் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்களது பொறுப்புகளுக்கான பிரதிநிதிகளை தேர்வு செய்தனர். தேர்தல் அதிகாரி ஏ.கே. சுல்தான் அமீர் இந்தத் தேர்தல் நடைமுறையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு பொதுக்குழு கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

மேலும், தாம்பரம் மத்திய பகுதியில் தமுமுக மமக அமைப்பின் செயல்பாடுகளை மேலும் வலுப்படுத்துவது, பொதுமக்களுக்கான நலப்பணிகளை தொடர்ந்து முன்னெடுப்பது, சமூக நல்லிணக்கம் மற்றும் மக்கள் சேவையில் நிர்வாகிகள் ஒருங்கிணைந்து செயல்படுவது குறித்து கூட்டத்தில் ஆலோசி க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

புதிதாக தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகளுக்கு தலைமை நிர்வாகிகள் வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், அவர்களது பொறுப்புகளை சிறப்பாக மேற்கொண்டு மக்கள் நலனுக்காக தொடர்ந்து பணியாற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தமுமுக மற்றும் மமக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், வார்டு நிர்வாகிகள், இளைஞர்கள், மகளிர் அணியினர் மற்றும் கட்சி சார்ந்த பல்வேறு பொறுப்பாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தாம்பரம் மத்திய பகுதியில் நடைபெற்ற இந்த அமைப்பு தேர்தல் பொதுக்குழு கூட்டம், தமுமுகமமக அமைப்பின் அடுத்தகட்ட செயல்பாடுகளுக்கு புதிய நிர்வாகிகளை உருவாக்கும் வகையில் நடைபெற்ற முக்கிய நிகழ்வாக அமைந்தது.



## செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்களை மிரட்டியதாக புகார் பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு சங்கம் கண்டனம்

நாட்றம்பள்ளி: செப்-20-
திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் மாணவர் ஒருவர் வகுப்பறைக்கு வெளியே அமர வைக்கப்பட்டு காலாண்டுத் தேர்வு எழுத வைக்கப்பட்டதாக எழுந்த புகார் குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்களிடம், பள்ளி ஆசிரியர்கள் மிரட்டும் வகையில் நடந்துகொண்டதாக ஊடக உரிமைக் குரல் பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

பள்ளியின் உதவித் தலைமை ஆசிரியர் ராஜேந்திரன் மற்றும் சில ஆசிரியர்கள், செய்தியாளர்களின் பணிக்கு இடையூறு ஏற்படுத்தி அவர்களை அங்கிருந்து வெளியேற்றியதாக சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அல்லது கல்வித்துறை தரப்பின் விளக்கம் இந்தத் தகவலில் இடம்பெறவில்லை.

இச்சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ள சங்கத்தின் பொதுச் செயலாளர் தமிழன் வடிவேலு, புகார் குறித்து கல்வித்துறை உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தி, தவறு உறுதி செய்யப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் அளித்து, முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

## இரட்டைக் கொலை விவகாரம்: போராட்டக்காரர்கள் மீது போலீஸ் நடவடிக்கைக்கு விசிக கண்டனம்

சிவகங்கை செப்-20
சிவகங்கை அருகே கொடிக்காடு கண்மாய்ப் பகுதியில் இரண்டு இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து நடைபெற்ற போராட்டத்தில் காவல்துறை மேற்கொண்ட நடவடிக்கைக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.



இரட்டைக் கொலை வழக்கில் உண்மையான குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் மற்றும் அரசு வேலை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் காளையார்கோவிலில் சாலை மறியலில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்களை கலைக்க போலீசார் லேசான தடியடி நடத்தி, பலரை கைது செய்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மானாமதுரை தொகுதி மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் வே.பாலையா வெளியிட்டுள்ள அறிக்கையில், போராட்டத்தில் ஈடுபட்ட உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் மீது காவல்துறை நடவடிக்கை மேற்கொண்டதற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும், உயிரிழந்த இரு இளைஞர்களின் குடும்பங்களுக்கும் உரிய நிவாரணம் மற்றும் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்தியுள்ளார். இதே கோரிக்கைகளை முன்வைத்தே உறவினர்களும் போராட்டத்தில் ஈடுபட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சிவகங்கை மாவட்டத்தில் கூலிப்படை சார்ந்த குற்றச் சம்பவங்களைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்வதுடன், இளைஞர்களிடையே குற்றத் தடுப்பு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் வழக்கறிஞர் வே.பாலையா விசிக மாவட்டச் செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

## உதகை தமிழக அரசு விருந்தினார் மாளிகையில் தமிழக கால்நடை துறை அமைச்சர் 40 பயனாளிகளுக்கு ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் பல்வேறு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

நீலகிரி, செப்.20-
தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின் படி, நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.10.99 கோடி மதிப்பில் முடிவுற்ற 55 புதிய திட்டபணிகளை, கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் செ.கமலி , மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, 40 பயனாளிகளுக்கு ரூ.1.33 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டத்தில், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இன்றைய தினம் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.25,000/- மதிப்பில் புதிய குடும்ப அட்டைகளையும், 3 பயனாளிகளுக்கு ரூ.1.20 இலட்சம் மதிப்பில் இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை பெறுவதற்கான ஆணையினையும், 3 பயனாளிகளுக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பில் முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதி பெறுவதற்கான ஆணையினையும், மத்திய கூட்டுறவு வங்கி சார்பில் 3 பயனாளிகளுக்கு 3.00 இலட்சம் மதிப்பில் தொழிற் முனைவோர் கடனதவிகளையும், 3 பயனாளிகளுக்கு ரூ.23.00 இலட்சம் மதிப்பில் சுய உதவி க்குழு கடனுதவி களையும், தோட்டக்கலைத்துறை சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கம் முன்னணி செயல் விளக்கம் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.18.75 இலட்சம் மதிப்பில் கடனுதவியினையும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் குன்னூர் நகராட்சி சார்பில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10.00 இலட்சம் மதிப்பில் குன்னூர் காட்டேரி பகுதியியில் புதிதாக கட்டப்பட்ட நியாயவிலைக்கடையினையும், பேரூராட்சிகள் துறை சார்பில் சிறப்புப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தேவர்சோலை, கேத்தி, கீழ்குந்தா, சோலூர் ஆகிய பகுதிகளில் ரூ.92.92 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பல்வேறு புதிய கட்டடங்களையும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் ரூ.5.69 கோடி மதிப்பில் 22 புதிய கட்டடங்களையும், பொதுப்பணித்துறை சார்பில் ரூ.1.90 கோடி மதிப்பில் 3 புதிய கட்டடங்களையும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் சார்பில் ரூ.80.00 இலட்சம் மதிப்பில் 5 புதிய கட்டடங்களையும், சத்துணவு திட்டத்தின் கீழ் ரூ.1.47 கோடி மதிப்பில் 13 புதிய கட்டடங்களையும், மாவட்ட வழங்கல் துறை சார்பில் ரூ.10.00 இலட்சம் மதிப்பில் மொத்தம் ரூ.10.99 கோடி மதிப்பீட்டில் 55 எண்ணிக்கையிலான புதிய திட்டப்பணிகளை பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.



இந்நிகழ்ச்சியில், மாவட்ட பிருந்தா , மாவட்ட வருவாய் அலுவலர் வாசுகி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் ., குன்னூர் சார் ஆட்சியர் காஞ்சன் சௌத்ரி மாவட்ட வன அலுவலர் திரு. கஷாப் சசாங் ரவி (நீலகிரி வனக்கோட்டம்), உதகை வருவாய் கோட்டாட்சியர் டினு அரவிந்த், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) தீப சித்ரா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) தலோகநாயகி உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்

## செங்குன்றத்தில் பகுஜன் சாமஜ் கட்சியின் ஜெய்பீம் மாடல் பொதுக்கூட்டம்

மாதவரம், செப்.20-
மாதவரம் தொகுதி செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையம் அருகே திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பகுஜன் சாமஜ் கட்சி சார்பில் 147-வது பிறந்த நாள் கானும் பெரியார், நினைவுநாள் கானும் பூவை பூர்த்தியார், இம்மானுவேல் சேகரன், ஆம்ஸ்ட்ராங் ஆகியோரின் வழியில் ஜெய்பீம் மாடல் பொதுக்கூட்டம் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தலைவர் வழக்கறிஞர் சந்தோஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் ஜிங்கா, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன், மாவட்ட பொது செயலாளர் ஜெகதீசன், மாவட்ட துணைத்தலைவர் ஜோதிராமலிங்கம், பொன்னேரி தொகுதி தலைவர் சோமு ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக திருவள்ளூர் ஒருங்கிணைந்த மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சங்கர், மாவட்ட துணைத்தலைவர் ஜானகிராமன், மாதவரம் தொகுதி தலைவர் சிவகுமார், மாதவரம் தொகுதி பொது செயலாளர் புவி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக மாநில தலைவர் டாக்டர் பி.ஆனந்தன், மாநில பொது செயலாளரும் மத்திய ஒருங்கிணைப்பாளருமான இரா.பெரியாரன்பன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். இதில் நிர்வாகிகள் சம்பத், ஆட்டோபாலாஜி, ஸ்ரீதர், தமிழ், மதன், மோகன் உள்ளிட்ட பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர். முடிவில் மாதவரம் தொகுதி செயலாளர் சுந்தர்ராஜ் ஆகியோர் அனைவருக்கும் நன்றி கூறினர்.






# கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி, செப்.20–

கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

கிருஷ்ணகிரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில், தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சார்பில், நேற்று கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்ல் செவிலியர்கள் கவிதா, சதிஷ், சிந்து, அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் நந்தகுமார், செயலாளர் கல்யாணசுந்தரம், மகளிர் துணைக்குழு அமைப்பாளர் ஜெகதாம்பிகா ஆகியோர் கோரிக்கை குறித்து பேசினர்.

தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்க மாவட்ட தலைவர் பிரபு தலைமை வகித்து பேசியதாவது: தமிழக அரசில் தற்போது காலியாக உள்ள, 4,724 செவிலியர் பணியிடங்களை, மாவட்ட சுகாதார சங்கத்தின் மூலம், 11 மாத ஒப்பந்த அடிப்படையில் நிரப்ப அரசாணை உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒப்பந்த அடிப்ப டையில் புதிய பணி நியம னங்களை அரசு செய்வது, அரசு வேலை கனவில் உள்ள லட்சக்க ணக்கான செவிலிய ர்களுக்கும், நர்சிங் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒப்பந்த முறையில் செவிலிய ர்களை பணியமர்த்தும் போது, பரிந்துரை மற்றும் ஊழல் நடக்க வாய்ப்புள்ளது. இதனால் தகுதியில்லாதவர்கள் பணியில் இணைய நேரிடலாம். மேலும், நோயாளிகளுக்கு தரமான சிகிச்சை கிடைப்பதிலும் சிக்கல் உள்ளது. எனவே தமிழக அரசு, இந்த அரசாணையை உடனே ரத்து செய்து, ஒப்பந்த முறையில் தற்காலிகமாக செவிலியர்களை நிரப்பாமல், எம்.ஆர்.பி., தேர்வாணையம் மூலம் தேர்வு நடத்தி தகுதி வாய்ந்த செவிலியர்களை நிரந்தர பணியில் அமர்த்த வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இக்கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

# இதயத்தை காக்க 3 கி.மீ. நடை! மதுரையில் ‘ஹார்ட் ஆஃப் மதுரை’ விழிப்புணர்வு பேரணி

மதுரை, செப்.20–

உலக இதய தினத்தை முன்னிட்டு, இதய ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மதுரை மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை சார்பில் ‘ஹார்ட் ஆஃப் மதுரை’ என்ற விழிப்புணர்வு நடைப்பயணம் நடைபெற்றது.

மதுரை காந்தி அருங்காட்சியகத்தில் தொடங்கிய 3 கிலோமீட்டர் நடைப்பயணம், மீண்டும் அதே இடத்தில் நிறைவடைந்தது. இதில் பொதுமக்கள், குடும்பத்தினர், மருத்துவர்கள், மருத்துவமனை பணியாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்கு டி-ஷர்ட்டுகள், பதக்கங்கள் மற்றும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. நடைப்பயணத்தின் மூலம் உடற்பயிற்சி, உடலுழைப்பு மற்றும் இதய நோய் தடுப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

“ஒவ்வொரு அடியும் இதயத்திற்கு முக்கியம்”




மருத்துவமனையின் இதயவியல் துறைத் தலைவரும், ஸ்ட்ரக்சுரல் இன்டர்வென்ஷன்ஸ் இயக்குநருமான டாக்டர் R. சிவக்குமார் கூறுகையில், இதய ஆரோக்கியத்தை விழிப்புணர்வு, ஆரோக்கியமான பழக்கவழக்கங்கள் மற்றும் சரியான நேரத்தில் மருத்துவ ஆலோசனை பெறுவதன் மூலம் பாதுகாக்க முடியும் என்றார்.

“3 கிலோமீட்டர் நடைப்பயணம் என்றாலும், அதன் பின்னணியில் உள்ள செய்தி மிகவும் முக்கியமானது. ஆரோக்கியமான வாழ்க்கை முறையை நோக்கி வைக்கும் ஒவ்வொரு அடியும் இதயத்திற்கு முக்கியமானது” என்றார்.

மேலும், தினசரி நடைப்பயிற்சி, சைக்கிள் ஓட்டுதல், நீச்சல், யோகா உள்ளிட்ட உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதுடன், உப்பு, சர்க்கரை மற்றும் ஆரோக்கியமற்ற கொழுப்புகளை குறைத்து சமச்சீரான உணவை எடுத்துக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. ரத்த அழுத்தம், ரத்தச் சர்க்கரை, கொலஸ்ட்ரால் மற்றும் உடல் எடையை தொடர்ந்து கண்காணிப்பதும் அவசியம் என தெரிவிக்கப்பட்டது.

புகைப்பிடித்தல் மற்றும் புகையிலை பயன்பாட்டை தவிர்த்தல், மன அழுத்தத்தை குறைத்தல், போதுமான தூக்கம் ஆகியவையும் இதய ஆரோக்கியத்தை பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் இதயவியல் துறையில் மேம்பட்ட நோயறிதல், அவசர சிகிச்சை, கரோனரி மற்றும் கட்டமைப்பு சார்ந்த இதய சிகிச்சைகள் உள்ளிட்ட பல்வேறு நவீன சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

ASD, VSD, PDA அடைப்புகள், TAVI/TAVR, மிட்ராக்கிளிப் உள்ளிட்ட கட்டமைப்பு சார்ந்த சிகிச்சைகளுடன், ஜீரோ-கான்ட்ராஸ்ட் ஆஞ்சியோபிளாஸ்டி, லேசர் ஆஞ்சியோபிளாஸ்டி, மெக்கானிக்கல் த்ரோம்பெக்டமி உள்ளிட்ட சிறப்புச் சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுவதாக கூறப்பட்டது.

குழந்தைகளுக்கான இதயவியல் மற்றும் இதய அறுவை சிகிச்சை, CTVS, இதய மயக்கவியல் மற்றும் தீவிர சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு சிறப்புப் பிரிவுகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாக மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

செய்தியாளர் சந்திப்பில் மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை இயக்குநர் திலீப் மற்றும் மீனாட்சி மிஷன் மருத்துவமனை மருத்துவ நிர்வாகி டாக்டர் B. கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# காவேரிப்பட்டணம் தாம்சன் பேட்டையில் வேலூர் ஸ்ரீபுரம் தங்க கோயில் ஸ்ரீநாராயணி அம்பாள் அபிஷேக ஆராதனை ஏராளமான பக்தர்கள் பங்கேற்பு

கிருஷ்ணகிரி, செப்.20–

கிருஷ்ணகிரி மாவட்டம், சாந்தி புட்ஸ் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் சாந்தி மார்ட்,தொழிலதிபர் திருவாளர் K.பார்த்தீபன்-திலகவதி அவர்களின் காவேரிப்பட்டணம் தாம்சன் பேட்டை பகுதியில் அமைந்துள்ள இல்லத்தில், சிறப்பு ஏற்பாட்டின் பேரில் வேலூர் ஸ்ரீபுரம் தங்கக் கோயில் ஸ்ரீநாராயணி அம்பாளுக்கு அபிஷேக ஆராதனை மற்றும் சிறப்பு பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றன.

இதையொட்டி ஸ்ரீநாராயணி அம்பாளுக்கு பல்வேறு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரங்கள் மற்றும் ஆராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து பக்தர்களின் நலன் மற்றும் குடும்பங்களின் வளம் வேண்டி சிறப்பு பிரார்த்தனைகள் மேற்கொ





ள்ளப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் காவேரிப்பட்டணம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு, ஸ்ரீநாராயணி அம்பாளை தரிசனம் செய்து அருள் பெற்றனர். பக்தர்களுக்கு சிறப்பு பிரசாதம் வழங்கப்பட்டது.

பக்தி மற்றும் ஆன்மிக உணர்வுடன் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது.





# குன்னூரில் விநாயகர் விசர்ஜன ஊர்வலம் நடைபெற்றது

நீலகிரி, செப்.20–

நீலகிரி மாவட்டத்தில் குன்னூரில் பல்வேறு இடங்களிலும் இந்து முன்னணி சார்பில் 50 பெரிய சிலைகள் மற்றும் 108 சிறிய விநாயகர் சிலைகள் கடந்த 14 ம் தேதி வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டது. அங்கு பக்தர்கள் வழிபாடு நடத்தி, தரிசனம் செய்தனர். பொது இடங்களில் வைக்கப்பட்ட சிலைகளுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது. இந்த நிலையில்பிரதிஷ்டை செய்த விநாயகர் சிலைகள் விசர்ஜன ஊர்வலம் குன்னூரில் நடைபெற்றது. சிம்ஸ்பூங்காவில் ஊர்வலம் தொடங்கியது. மேளதாளம் முழங்க வாகனங்களில் விநாயகர் சிலைகள் பெட்போர்டு, மௌண்ட் ரோடு, பேருந்துநிலையம் வழியாக ஊர்வலமாக கொண்டுவரப்பட்டது.

ஊர்வலத்தில் காளி, கருப்பராயன் வேடமணிந்தவர்களின் நடனமாடி வந்தனர். மகளிர் பலரும் சிறிய விநாயகர் சிலைகளை கையில் ஏந்தி வந்தனர்.,

விசர்ஜன விழாவையொட்டி பலத்த போலீசார் பாதுகாப்புடன் பிரதிஷ்டை செய்யப்பட்ட விநாயகர் சிலைகளை குன்னூர் லாஸ் நீர் வீழ்ச்சிக்கு கொண்டு செல்லப்பட்டன.நீலகிரி மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர், குன்னூர் காவல் துணை கண்காணிப்பாளர் தலைமையில் காவல் துறையினர் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

# நைனாங்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பள்ளி மேலாண்மைக்குழு நிர்வாகிகள் தேர்வு

சிவகங்கை:செப்-20

சிவகங்கை வட்டம் அரசனி முத்துப்பட்டி அருகே உள்ள நைனாங்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், பள்ளி மேலாண்மைக்குழு மறுசீரமைப்பு செய்யப்பட்டு புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

1984–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பள்ளியில் தற்போது 30–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். பள்ளியில் ஏற்கனவே செயல்பட்டு வந்த பள்ளி மேலாண்மைக்குழுவை மறுசீரமைத்து புதிய நிர்வாகிகளைத் தேர்வு செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது.

பள்ளித் தலைமையாசிரியை இந்திரா தலைமையில், ஆசிரியர் பயிற்றுநர் சிவகங்கை



செந்தில்குமார், வகுப்பாசிரியை பாக்யலெட்சுமி ஆகியோர் முன்னிலையில் தேர்வு நடைபெற்றது.

இதில் பள்ளி மேலாண்மை க்குழுத் தலைவராக துக்கால் கிராமத்தைச் சேர்ந்த கன்னகி பாலமுருகன், துணைத் தலைவராக அரசனி கிராமத்தைச் சேர்ந்த பமேஷ்வரி சூர்யா ஆகியோர் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர். மேலும், பெற்றோர்கள் 20 பேர் குழு உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட பள்ளி மேலாண்மைக்குழு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர்.




# எம்.கே.ஜே.சி கல்லூரியில் ஆர்ட் ஸ்மார்ட் - 2026 கலாச்சாரக் கலை விழா

வாணியம்பாடி, செப்.20–

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் 18.09.2026 அன்று கல்லூரி பேரவை குழு மற்றும் நுண்கலை மன்றம் சார்பாக தேசிய அளவில் கல்லூரிகளுக்கிடையேயான ஆர்ட் ஸ்மார்ட் - 2026 கலாச்சாரக் கலை விழா கல்லூரித் தலைவர் வி.திலீப் குமார் ஜெயின், செயலாளர் ஆனந்த் சிங்வி, பொருளாளர் லலித் குமார் ஜெயின், முதல்வர் டாக்டர் ம.இன்பவள்ளி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

சீட் பண்ட்ஸ் சிறப்பு விருந்தினராக விஜய் டிவி சூப்பர் சிங்கர் வின்னர் பாடகர் ஜான் ஜெரோம் வருகைப் புரிந்து மாணவிகள் தமது திறமைகளை முழுமையாக வெளிப்படுத்த ஆர்ட் ஸ்மார்ட் சிறந்த தளம் இந்த வாய்ப்பை பயன்படுத்தி வெற்றி பெற உங்கள் அனைவருக்கும் வாழ்த்துகள். பாராட்டுகள்தான் நமக்கான சிறந்த பரிசு என்றும் பல்வேறு திரைப்பாடல்கள் பாடி அனைவரையும் மகிழ்வித்து யூரோ கிட்ஸ் பள்ளி மற்றும் கயல் பிரைவேட் லிமிடெட் நிர்வாக அலுவலர் கயல்விழி அவர்களுடன் இணைந்து தனிநபர் பாடல், குழு நடனம், நாட்டுப்புறக் கலைகள், ஆடை அலங்கார அணிவகுப்பு, ரங்கோலி போன்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் ரூ. 1லட்சம் பரிசுத்தொகை வழங்கி சிறப்பித்தார். பெங்களூர் ஆச்சார்யா பிஸினஸ் ஸ்கூல், வேலூர் அக்ஸிலியம் கல்லூரி, எம்.எம்.இ.எஸ், டி.கே.எம், குடியாத்தம் கே.எம்.ஜி, விஜய வித்யாலயா கல்லூரி, பி.எஸ்.வி கல்லூரி, வாணி பாலி டெக்னிக் கல்லூரி திருப்பத்தூர் அரசு கலைக் கல்லூரி, தூய நெஞ்சக் கல்லூரி, எம்.ஜி.ஆர் கல்லூரி, ஊத்தங்கரை அதியமான் கல்லூரி, பிரியதர்ஷினி இன்ஜினியரிங் கல்லூரி, போன்ற 13 கல்லூரிகளிலிருந்து சுமார் 250 மாணவிகளும் 13 பேராசிரியர்களும் கலந்துக்கொண்டனர். 3000 -க்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கேற்று மகிழ்ச்சியுடன் கொண்டாடினர்.

# திருப்புவனத்தில் ஆக்கிரமிப்புகளை 6 வாரங்களுக்குள் அகற்ற உத்தரவு DYFI வரவேற்பு




திருப்புவனம்: செப்-20–

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பகுதியில் பொதுமக்கள் பயன்படுத்தி வந்த இடம் மற்றும் பொதுப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரி இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் (DYFI) தொடர்ந்த வழக்கில், 6 வாரங்களுக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளதாக DYFI தெரிவித்துள்ளது.

திருப்புவனம் வட்டம், திருப்புவனம் புதூர் குரூப் GR சர்வே எண் 70/77–ல் பொதுமக்கள் முளைப்பாரித் திடலாக பயன்படுத்தி வந்த சின்ன மாரியம்மன் கோவில் இடம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகவும், GR சர்வே எண் 70/61–ல் மேலத்தெரு மக்கள் பயன்படுத்தும் பொதுப்பாதையில் கழிப்பறை மற்றும் காம்பவுண்ட் சுவர் கட்டி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் DYFI தரப்பில் வழக்கு தொடரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் ஆக்கிரமிப்புகள் தொடர்பாக 6 வாரங்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ள நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக DYFI கூறியுள்ளது. இந்த உத்தரவை பொதுமக்களுக்கு கிடைத்த வெற்றி எனக் குறிப்பிட்டு DYFI வரவேற்றுள்ளது.




■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெற்ற சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட 61 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சியர் வே.நல்லசிவன், வழங்கினார். உடன் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மு.கஸ்தூரி மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகின்ற 22.09.2026 அன்று தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்கள் பயனடைந்திடும் வகையில் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத்திட்டம் விரிவாக்கத்தைத் தொடங்கி வைக்கவுள்ளதைத்தொடர்ந்து, தேனி மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்துவது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் நடைபெற்றது.

# "மாணவர் பாரதிதாசன் விவகாரத்தில் தி.மு.க., அரசியல் செய்கிறது" - அமைச்சர் வன்னி அரசு



சென்னை, செப்.20-

"மாணவர் பாரதிதாசன் கல்விக் கட்டண விவகாரத்தில் திமுகதான் அரசியல் செய்கிறது. உண்மையில் திமுகதான் தலித் மாணவர்களுக்கு துரோகம் செய்துள்ளது. வேங்கைவயல் விவகாரத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மீதே எஃப்ஐஆர் போட்டது திமுக அரசுதான்"என சமூகநீதித் துறை அமைச்சர் வன்னி அரசு குற்றம்சாட்டியுள்ளார்.

விழுப்புரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் வன்னி அரசு, " மாணவர் பாரதிதாசன் கல்விக் கட்டண விவகாரத்தில் நாங்கள் எந்த அரசியலும் செய்யவில்லை, திமுகதான் அரசியல் செய்கிறது. அம்பேத்கர் அயலகக் கல்வி உதவித் தொகை விவகாரத்தில் தவெக அரசு எந்த அரசியலும் செய்யவில்லை.

உண்மையில் திமுக தான் தலித் மாணவர்களுக்கு துரோகம் செய்துள்ளது. வேங்கைவயல் விவகாரத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மீதே எஃப்ஐஆர் போட்டது திமுக அரசுதான். வேங்கைவயலின் முரளிராஜா என்பவர் என்னிடம் மனு கொடுத்திருந்தார். திமுக அரசு தன்னை வஞ்சித்துவிட்டதாக அவர் அதில் தெரிவித்தார். காவலரான முரளிராஜா இப்போது இடைநீக்கத்தில் உள்ளார்.

இப்படி தலித் இளைஞர்கள், மாணவர்களுக்கு மிக மோசமாக வஞ்சகம் செய்தது திமுக அரசு. நெல்லையில் கவின் படுகொலைக்கு காரணமான சுர்ஜித்தின் தந்தை சரவணன் மற்றும் தாய் கிருஷ்ணகுமாரியை கைது செய்ய அப்போது பலமுறை விசிக போராட்டம் நடத்தியது. ஆனால் கிருஷ்ணகுமாரி கைது செய்யப்படவில்லை. இப்போது தவெக ஆட்சி அமைந்த பின்னர்தான் கிருஷ்ணகுமாரி கைது செய்யப்பட்டார்.

பாரதிதாசன் விவகாரத்தில் அக்கறை இருப்பது போல திமுக நாடகம் ஆடுகிறது. வேங்கைவயல் விவகாரத்தில் திமுக மன்னிப்பு கேட்க வேண்டும். மாணவர் பாரதிதாசனின் கல்விக் கட்டணத்துக்கான முழு தொகையையும் அனுப்பிவிட்டோம். அம்பேத்கர் அயலகக் கல்வி உதவித் தொகை திட்டத்தில் கடந்த ஆட்சியில் என்ன நடைமுறை இருந்ததோ, அதையேதான் இப்போதும் பின்பற்றுகிறோம்" என்றார்.

# கிறிஸ்தவ மதத்தில் இருந்து மீண்டும் இந்துவாக மாறியவருக்கு எஸ்.சி சான்று பெற உரிமையுள்ளது: ஐகோர்ட்



சென்னை, செப்.20-

கிறிஸ்தவ மதத்தில் இருந்து மீண்டும் இந்து மதத்துக்கு மாறியவரை, அந்த சமூகம் ஏற்றுக் கொண்டதால், எஸ்.சி. சான்று பெற மனுதாரருக்கு உரிமையுள்ளது எனக் கூறி, அவரை கிறிஸ்தவர் எனவும், அவரது சாதிச் சான்று உண்மையானதல்ல என்றும் மாவட்ட கண்காணிப்புக் குழு பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருவண்ணாமலையைச் சேர்ந்த ரவிக்குமார் என்பவர், பட்டியலினத்தவர்களுக்கான இட ஒதுக்கீட்டின் அடிப்படையில், சுங்கத்துறையில் பணிக்கு சேர்ந்து உதவி ஆணையராக பணியாற்றி வந்தார். கடந்த மே மாதம் பணி ஓய்வு பெற இருந்த நிலையில், அவரது சாதிச் சான்றிதழ் குறித்து விசாரணை நடத்தப்பட்டது.

விசாரணைக்கு பின், ரவிக்குமாரும், அவரது குடும்பத்தினரும் நல்ல நிறமாகவும், உயரமாகவும், நல்ல உடற்கட்டுடனும், தமிழ் - ஆங்கிலம் என இரு மொழிகளிலும் பேசுவதாகக் கூறி, அவர் கிறிஸ்தவர் எனவும், அவரது எஸ்.சி. சாதிச் சான்று உண்மையல்ல எனவும் மாவட்ட கண்காணிப்புக் குழு உத்தரவு பிறப்பித்தது.

இந்த உத்தரவை எதிர்த்தும், அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க சுங்கத்துறைக்கு தடை விதிக்கக் கோரியும், ரவிக்குமார் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி, கிறிஸ்தவ மதத்தில் இருந்து மீண்டும் இந்து மதத்துக்கு மாறியவரை, அந்த சமூகம் ஏற்றுக் கொண்டதால், எஸ்.சி. சான்று பெற மனுதாரருக்கு உரிமையுள்ளது எனக் கூறி, அவரை கிறிஸ்தவர் எனவும், அவரது சாதிச் சான்று உண்மையானதல்ல என்றும் மாவட்ட கண்காணிப்புக் குழு பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டார்.

மனுதாரர் இந்து கடவுளை வழிபட்டாரா, இந்து சமூகத்தினர் அவரை ஏற்றுக் கொண்டார்களா என்று மாவட்ட குழு ஆராய்ந்திருந்தால், அது சரியானது. ஆனால், நல்ல மாநிறமாக, உயரமாக, சுருட்டை முடியுடன், நல்ல உடற்கட்டுடன், தமிழ் - ஆங்கிலத்தில் சரளமாக பேசுவதால் அவர் கிறிஸ்தவர் என முடிவுக்கு வந்தது பொருத்தமற்றது என நீதிபதி, தனது உத்தரவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், மனுதாரரின் சாதிச் சான்று குறித்து மீண்டும் விசாரணை நடத்தி, எட்டு வாரங்களில் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என மாவட்ட குழுவுக்கு உத்தரவிட்ட நீதிபதி, வழக்கை முடித்து வைத்தார்

# "திருச்சியில் போராட்டம் நடத்தும் விவசாயிகள் தமிழக அரசுக்கு கால அவகாசம் வழங்க வேண்டும்" - அமைச்சர் வினோத்

கும்பகோணம், செப்.20-

" திருச்சியில் விவசாயிகள் நடத்தி வரும் போராட்டம் தொடர்பாக விவசாய சங்க தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். இவ்விவகாரத்தில் விவசாயிகள் தமிழக அரசுக்கு கால அவகாசம் வழங்க வேண்டும்" என்று வேளாண் துறை அமைச்சர் வினோத் கூறினார்.

திருச்சி சமயபுரத்தில், பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வலியுறுத்தி அனைத்து விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பினர் தொடர் காத்திருப்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் அமைச்சர் வினோத் கால அவகாசம் கோரியுள்ளார்.

கும்பகோணம் புதிய பேருந்து நிலையத்தில் 'மாசறு தஞ்சை' என்ற தலைப்பில் தூய்மைப் பணி நடைபெற்றது. இதில் தூய்மைப் பணியினை தொடங்கி வைத்து, சுத்தம் செய்த பின்னர் வேளாண்மை துறை அமைச்சர் வினோத் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், "கும்பகோணம் புதிய பேருந்து நிலையத்தில் தூய்மை பணி நடைபெற்றது.

இங்கு பயணிகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் முறையாக பராமரிக்கப்படுகிறதா எனவும், இங்கு உள்ள பெரும்பாலான கடைகள் பயணிகளுக்கு இடையூறாக வைக்கப்பட்டுள்ளது தொடர்பாகவும் ஆய்வு மேற்கொண்டுள்ளோம்.

திருச்சியில் விவசாயிகள் நடத்தி வரும் போராட்டம் தொடர்பாக 40 விவசாய சங்க தலைவர்களுடன் 8 அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்தினோம். இன்று 3 அமைச்சர்கள் அந்தப் போராட்டத்தில் ஈடுபடும் விவசாயிகளை சந்திக்க உள்ளோம்.

அனைத்து அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தியப்பின் அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது தொடர்பாக விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்த உள்ளோம். எனினும் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் தமிழக அரசுக்கு கால அவகாசம் வழங்க வேண்டும். 2028-ல் மகாமகம் நடைபெற உள்ள நிலையில் கும்பகோணம் பேருந்து நிலையத்தில் உள்கட்டமைப்பு பணிகள் மேம்படுத்தப்படும்.

கும்பகோணம் சாலையில் சுற்றித்திரியும் மாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். டெங்கு பரவுவதைத் தடுக்க சுகாதாரத் துறை மூலம் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சம்பா தாளடி சாகுபடிக்கு தண்ணீர் தேவைப்படும் பட்சத்தில் காவிரி நீர் திறந்து வைக்கப்படும். தண்ணீர் குறைவாக இருக்கும் நிலையில் அந்தந்த மாவட்டங்களில் என்னென்ன பயிர்கள் சாகுபடி செய்ய வேண்டும், அதிக விளைச்சல் தரும் பயிர்கள் குறித்து அந்தந்த மாவட்ட வேளாண்மை துறை அதிகாரி மூலம் விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது," என்றார்.

தொடர்ந்து, தூய்மைக்கான உறுதிமொழி ஏற்றுக்கொண்டபின், துணிப்பை குறித்து விழிப்புணர்வை அமைச்சர் ஏற்படுத்தினர். இந்த நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் ரேவதி, மாநகர மேயர் சரவணன், கோட்டாட்சியர் திருமலை, மாநகர ஆணையர் சுதா உள்ளிட்ட அதிகாரிகள், அலுவலகர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரை மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு விழா; கூட்டத்தை கணிக்க தவறிய புதிய அதிகாரிகள்



மதுரை, செப்.20-

மதுரை மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கு விழாவுக்கு வருகைதரும் பக்தர்கள் எண்ணிக்கையைக் கணிக்கத் தெரியாமல் 50 லட்சம் பேர் என தவறான தகவலை அரசுக்கு அளித்ததாலே, வழக்கத்துக்கு மாறாக மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள் கண்காணிப்பு அதிகாரிகளாகவும், 6,500 போலீஸார், வெளிமாவட்ட அதிகாரிகள் வரவழைக்கப்பட்டதாகவும் சர்ச்சைகள், விமர்சனங்கள் எழுந்துள்ளன.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் குடமுழுக்கு கடைசியாக 2009 ஏப்.8-ல் நடந்தது. 17 ஆண்டுகளுக்குப் பிறகு, நேற்று முன்தினம் கோலாகலமாக நடந்து முடிந்தது. மாசி, ஆவணி மூல வீதிகளில் தடுப்புகள் அமைத்து 'பாஸ்' வழங்கப்பட்ட உபயதாரர்கள், விஐபிகள், அரசியல் கட்சியினர், பக்தர்கள் உள்பட 11 ஆயிரம் பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

குடமுழுக்கு விழாவில் உள்ளூர் பக்தர்கள் 'பாஸ்' கிடைக்காமலும், போலீஸாரின் கெடுபிடிகள், கடுப்பாடுகளாலும் பங்கேற்க முடியாமல் ஏமாற்றம் அடைந்தனர். கோயில் அருகேகூட செல்ல முடியாமல், கோயில் கோபுரம் தெரியும் வெளி வீதிகளில் பக்தர்கள் ஆங்காங்கே நின்று குடமுழுக்கை தரிசித்தனர்.

1963, 1974, 1995, 2009 ஆகிய ஆண்டுகளில் நடந்த குடமுழுக்கு விழாக்களில் தற்போது போல் கெடுபிடிகள், கட்டுப்பாடுகள் இல்லை என்று கூறப்படுகிறது. அதனால், கடந்த கால குடமுழுக்கு விழாக்களில் உள்ளூர் பக்தர்கள் அனைவரும் கோபுர மாடங்களில் மட்டுமில்லாது, மாசி, சித்திரை, வெளி வீதிகளில் நின்று தரிசனம் செய்தனர்.

ஆண்டுதோறும் நடக்கும் மீனாட்சியம்மன் கோயில் சித்திரைத் திருவிழா மற்றும் குடமுழுக்கு விழாக்களில் உறவினர்கள், வெளி மாநில, வெளிமாவட்ட பக்தர்கள் திரள்வார்கள். மதுரையில் சித்திரைத் திருவிழாவில் மட்டுமே அதிகபட்சம் கள்ளழகர் ஆற்றில் இறங்கும் நாளில் 5 லட்சம் பக்தர்கள் வரை திரள்வார்கள்.

அதன்படி மாநகராட்சி நிர்வாகமும், இந்து அறநிலையத் துறையும் 15 லட்சம் பக்தர்கள் வரை திரள வாய்ப்புள்ளதாகத் திட்டமிட்டு அவர்களுக்கான அடிப்படை வசதிகள், பாதுகாப்பு நடைமுறைகளை மேற்கொள்வது வழக்கம்.

ஆனால், நேற்று முன்தினம் நடந்த குடமுழுக்கு விழாவில் வரலாற்றிலேயே இல்லாத வகையில், 50 லட்சம் பக்தர்கள் திரள வாய்ப்புள்ளதாக மாநகராட்சி கொடுத்த தகவலின்பேரில் நகராட்சி நிர்வாக இயக்குநர் தமிழக அரசுக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

ஆட்சியர், மாநகராட்சி ஆணையர், காவல் ஆணையர் மூவரும் மதுரைக்குப் புதியவர்கள் என்பதால் குடமுழுக்கு விழாவுக்கு திரளும் கூட்டத்தைக் கணிக்கத் தவறி இருக்கலாம், அதேநேரம், அவர்கள் மதுரையை நன்கறிந்த கீழ்நிலை அதிகாரிகளின் கருத்துகளைக் கேட்டு சரியான தகவலை அரசுக்குத் தெரிவித்து இருக்கலாம்.

மூன்று துறையினரும் கணிக்கத் தவறியதோடு மிகப்பெரிய எண்ணிக்கையில் பக்தர்கள் திரள வாய்ப்புள்ளதாகக் கூறியதாலேயே மீண்டும் கரூர் போன்று நெரிசல் நிகழ்ந்துவிடக்கூடாது என்பதை மனதில் வைத்து மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள் மூவரை கண்காணிப்பு அலுவலர்களாக அரசு நியமித்தது.

6,500 போலீஸார் ஐந்து அடுக்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இதுவரை இல்லாத வகையில் குடமுழுக்கு விழா பணிகளுக்காக கோவை, சேலம், திருப்பூர், ஈரோடு, திருச்சி, திருநெல்வேலி, சிவகாசி, தூத்துக்குடி, திண்டுக்கல் ஆகிய மாநகராட்சிகளில் இருந்து 1,000 தூய்மைப் பணியாளர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் கீழ்நிலை அலுவலர்கள் வரவழைக்கப்பட்டனர்.

மேலும், வழக்கத்துக்கு மாறான கட்டுப்பாடுகள், பாதுகாப்புக் கெடுபிடிகளால் உள்ளூர் பக்தர்கள் குடமுழுக்கு விழாவில் பங்கேற்க முடியாமல் சிரமப்பட்டதாகவும், மாநகராட்சி அதிகாரிகள், அலுவலர்கள் இரவு, பகலாக உழைத்தது விரயமான தாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது: குடமுழுக்கு விழாவுக்காக மாநகராட்சி ஏற்பாடு செய்த பெரும்பாலான தற்காலிக கழிப்பறைகள் பயன்பாடு இல்லாமல் போனது. 203 பிளாஸ்டிக் குடிநீர் தொட்டிகளில் இரண்டாவது முறையாக நீர் நிரப்பப்படவில்லை. பாதுகாப்புக் கெடுபிடியால் பக்தர்கள் வராமல் 74 வாகன நிறுத்துமிடங்களில் பெரும்பாலானவை வெறிச்சோடின.

50 லட்சம் பக்தர்கள் வரை வர வாய்ப்புள்ளதாகக் கூறியதாலே அனுபவம் இல்லாத அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் பேரிடர் காலங்களைப்போல கட்டுப்பாட்டு அறை உள்ளிட்ட பல்வேறு ஏற்பாடு களைச் செய்தனர்.

செப்.16-ம் தேதி பிற்பகல் 3 மணி முதல் மாசி வீதிகள், சித்திரை வீதிகள் மற்றும் முக்கியச் சாலைகள் அனைத்தும் காவல்துறையினரால் தடுப்புகள் அமைக்கப்பட்டு தடைசெய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டது.

குடமுழுக்குப் போன்ற விழாக்காலங்களில் கடைகளைத் திறந்து வைத்தால் வியாபாரம் அதிகளவில் நடைபெறும். ஆனால், மாசி வீதிகளில் உள்ள பெரிய கடைகள், சிறிய கடைகள், டீ, வடை கடைகள், இட்லி கடைகள் அடைக்கப்பட்டு, வாகனப் போக்குவரத்தும் இல்லாமல் ஊரடங்கு போன்று வெறிச்சோடிக் காணப்பட்டது. கோயில் பக்கமே யாரும் போக முடியாது என்ற எண்ணம் ஆழமாக பதியும் வகையில் அரசின் நடவடிக்கை இருந்தது.

சித்திரைத் திருவிழாக் காலங்களில் மாசி, சித்திரை வீதிகளில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எந்தத் தடையுமின்றி சுவாமியை தரிசனம் செய்ததுதான் பெருமையும், வரலாறுமாக இருந்தது. விஐபிக்கள் சிரமமின்றி கும்பாபிஷேகத்தை பார்த்து திரும்ப வேண்டும்.

அதுவரை யாரையும் அனுமதிக்கக்கூடாது. கோயிலை சுற்றியுள்ள சித்திரை வீதி உள்ளிட்ட தெருக்களில் பக்தர்களை அனுமதித்தால் பெரிய அளவில் நெரிசல் ஏற்பட்டு அசம்பாவிதம் நடந்துவிடும். இதை தவிர்க்க வேண்டும் என்ற இந்த இரண்டு விஷயங்களை மையப்படுத்தியே 90 சதவீத ஏற்பாடுகள் இருந்தன.

இதனால் நேரடி கோபுர தரிசனம், புனித நீர் தெளிப்பு, கோயிலுக்குள் மூலவர் தரிசனம் என எதுவும் முழுமையாக பெரும்பாலான பக்தர்களுக்கு கிடைக்காததால் ஏமாற்றமே மிஞ்சியது. ஆண்டுதோறும் திருக்கல்யாணத்தின்போது கிடைத்த திருப்திகூட கும்பாபிஷேகத்தில் கிடைக்கவில்லையே என பக்தர்கள் புலம்புவதை வெளிப்படையாக காண முடிந்தது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# திருத்தணி ஒன்றிய பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி தீவிரம்

திருத்தணி, செப்.20-

டெங்கு உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல் அதிகரித்து வரும் நிலையில், திருத்தணி பகுதியில் காய்ச்சல் தடுப்பு பணிகளில் சுகாதாரத்துறையினர் தீவிரம் காட்டி வருகின்றனர். தமிழகத்தில் பருவகால மாற்றம் மற்றும் விட்டு விட்டு மழை பெய்து வருவதால் காய்ச்சல் மற்றும் டெங்கு பாதிப்பு அதிகரித்து வருகிறது. குறிப்பாக சென்னை, திருவள்ளூர் போன்ற மாவட்டங்களில் காய்ச்சலுக்கு பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.உலக வரைபடங்களை ஆராய்

இந்நிலையில், சுகாதாரத்துறை சார்பில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. திருத்தணி ஒன்றியத்தில் உள்ள 27 ஊராட்சிகளில் சாதாரண காய்ச்சல் மற்றும் டெங்கு தடுப்பு பணிகள் வட்டார மருத்துவ அலுவலர் கலைவாணி தலைமையில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. சுகாதராத்துறையினர் மற்றும் கொசு ஒழிப்பு பணியாளர்கள், ஊராட்சி துப்புரவு பணியாளர்களுடன் இணைந்து தூய்மை மற்றும் சுகாதாரப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக ஆர்.வி.என். கண்டிகையில் நேற்று சிறப்பு சுகாதார முகாம் நடைபெற்றது. மருத்துவ அலுவலர் டாக்டர் ராகுல் தலைமையில் நடந்த சிறப்பு மருத்துவ முகாமில் கிராம மக்களுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் மருந்து, மாத்திரை வழங்கப்பட்டது. கொசு ஒழிப்பு பணியாளர்கள் வீடுவீடாக சென்று கொசு மருந்து அடித்தும், தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

வீடுகளுக்கு அருகில் தேவையற்ற டயர், பிளாஸ்டிக் பொருட்கள் அப்புறப்படுத்தப்பட்டது. தண்ணீர் டேங்குகளை தூய்மைப்படுத்தி குளோரின் செய்யப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. பொதுமக்கள் தாங்கள் வசிக்கும் பகுதிகளில் மழை தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், நிலவேம்பு கசாயம் குடிக்க வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தினர். பள்ளி மாணவர்களுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் மாவட்ட இளநிலை பூச்சியியல் நிபுணர் அருண்குமார், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் முரளி, சுகாதார ஆய்வாளர்கள் பாலசுந்தரம், தமிழரசன் உட்பட சுகாதாரத்துறையினர் கலந்து கொண்டனர்.

# ரேணிகுண்டா ரயில் நிலையத்தில் பரபரப்பு ரயில் மீது ஏறி தற்கொலைக்கு முயன்ற வாலிபர்

திருமலை, செப்.20-

திருப்பதி மாவட்டம், ரேணிகுண்டாவில் உள்ள ரயில் நிலையத்தில் திருவனந்தபுரம் - புதுடெல்லி செல்லும் கேரளா விரைவு ரயில் நேற்று வந்து நின்றது. அப்போது ரயிலில் இருந்து இறங்கிய ஒரு வாலிபர் நடைமேடையில் கூச்சலிட்டபடியே ரயிலின் மீது ஏறினார். அப்போது திடீரென உயரழுத்த மின் கம்பியைப் பிடிக்க முயன்றார். இதனை கண்ட ரயில்வே அதிகாரிகள் உடனடியாக மின் விநியோகத்தை நிறுத்தினர்.

உடனே ரயில்வே பாதுகாப்புப் படை, ரயில்வே போலீசார் மற்றும் தீயணைப்பு படையினர் விரைந்து வந்து ஒரு மணி நேரம் போராடி தற்கொலைக்கு முயன்ற வாலிபரை பாதுகாப்பாக மீட்டனர். மின்சாரம் துண்டிக்கப்பட்டதால், ரயில் போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

இதையடுத்து போலீசார் வாலிபரை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றனர். ஆனால் அவர் தன்னை கைது செய்தால், 48 மணி நேரத்திற்குள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வேண்டும் என்றும், 3 நட்சத்திர அதிகாரி மட்டுமே வர வேண்டும் என்று கத்தினார்.

தொடர்ந்து போலீசார் விசாரணையில், அந்த வாலிபர் அசாம் மாநிலத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டது. அவருக்கு மனநலக் குறைபாடு உள்ளதா? அல்லது மது போதையில் இருந்தாரா? என்பதை கண்டறிய போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவத்தால் ரேணிகுண்டா ரயில் நிலையத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# தவெக அரசின் புதிய தலைமைச் செயலகம் திட்டம் கைவிடப்பட வேண்டியது: எல்.முருகன்

சென்னை, செப்.20-

தவெக அரசின் புதிய தலைமைச் செயலகம் திட்டம் உண்மையில் கைவிடப்பட வேண்டியது என்று எல்.முருகன், ஒன்றிய இணை அமைச்சர் தெரிவித்துள்ளார். மீனவர்களின் வாழ்வை சீரழிக்கக் கூடாது. முதலமைச்சர் விஜய் மீனவராக நடித்துள்ளார். நடித்தால் மட்டும் போதாது, மீனவரின் வலியைப் புரிந்தவராக இருக்க வேண்டும்.



இத்திட்டம் மீனவர்களைப் பெரிதும் பாதிக்கும் என தெரிவித்தார்

# ஏஐ அச்சுறுத்தலை கையாள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள கலிபோர்னியா ஆளுநர் உத்தரவு

கலிபோர்னியா, செப்.20-

மனித குலத்துக்கு ஏஐ (செயற்கை நுண்ணறிவு) நுட்பத்தால் பாதுகாப்பு அச்சுறுத்தல் எழுந்துள்ள நிலையில் ஏஐ அச்சுறுத்தலை கையாள்வதற்கான நடவடிக்கையை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்காவின் கலிபோர்னியா ஆளுநர் கேவின் நியூஸம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.2028-ல் நடைபெற உள்ள அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சியின் அதிபர் வேட்பாளர் முகமாக கேவின் பார்க்கப்படுகிறார். இந்நிலையில், ஆட்சியில் உள்ள அதிபர் ட்ரம்ப், ஏஐ பாதுகாப்பு சார்ந்த எந்தவித நடவடிக்கையையும் முன்னெடுக்காத சூழலில், அதை தான் முன்னெடுத்துள்ளதாக கேவின் கூறியுள்ளார்."முன்னணி செயற்கை நுண்ணறிவு நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளே ஏஐ சார்ந்த ஒழுங்குமுறை வேண்டும் என்று கூறி வருகின்றனர். இருப்பினும் இதில் அதிபர் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு, குறைந்தபட்சம் அதனை மேற்பார்வையிட கூட முன்வரவில்லை.இந்நிலையில், ஏஐ அச்சுறுத்தலை கையாள்வதற்கான நடவடிக்கையை விரைந்து மேற்கொள்ள உத்தரவு பிறப்பித்துள்ளேன்.இதன் மூலம் நாட்டிலேயே முதல் முறையாக செயற்கை நுண்ணறிவு நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்புச் சோதனைகளின் மீது சுதந்திரமான மேற்பார்வையை நிறுவ முடியும். அது புதிய சட்டத்தை இயற்றவும் வழிவகுக்கும். இதோடு, ஏஐ 'கில் ஸ்விட்ச்' உருவாக்கும் பணியையும் முன்னெடுக்குமாறு கூறியுள்ளேன்" என கேவின் தெரிவித்துள்ளார்.அதென்ன கில் ஸ்விட்ச்?ஏஐ இயக்கம் மனிதர்களின் கட்டுப்பாட்டை மீறும் போதோ அல்லது அவை செயலிழக்கும் போதோ அதை கட்டுப்படுத்தும் அம்சமத்தை தான் 'கில் ஸ்விட்ச்' என தொழில்நுட்ப வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் ஏஐ சிஸ்டத்தின் இயக்கத்தை நிறுத்த முடியும் என தகவல்."செயற்கை நுண்ணறிவு மனித குலத்தையே அழித்துவிடும்" என்று எலான் மஸ்க், டேரியோ அமோடி (ஆந்த்ரோபிக் சிஇஓ), சாம் அல்ட்மேன் (ஓபன் ஏஐ சிஇஓ) ஆகியோர் எச்சரித்த நிலையில் கேவின் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். கலிபோர்னியாவில் உள்ள சிலிகான் வேலியில் உலகின் முன்னணி டெக் மற்றும் ஏஐ துறை சார்ந்த நிறுவனங்கள் இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161